# பாக்யா

இதழ்-09

ஆனி 01 - 2007



30/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01.06

# பாக்யா

இதழ் -9 அறிவுப் புதையல்

## சிறுவர் மாத இதழ்

ஈன்ற பொழுதில் பெரிது உவக்கும் தன் மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்.


**ஆசிரியர்**
S.இராஜகுலேந்திரன்

**ஆசிரியர் குழு**
Mrs.M.உதயகுமாரன்
Mrs.T.தில்லையம்பலம்
Miss.S.சின்னத்துரை
Mr.S.S.ஜனகன்
Mrs.S.பாலசுப்பிரமணியம்
Mrs.T.லிங்கேஸ்வரன்
Mr.J.பிரதீபன்
Mr.M.டொமினிக்ஜீவா
Mrs.S.சிவகுமார்

**நிர்வாக ஒருங்கிணைப்பாளர்**
பாக்யா

**ஓவியம்**
M.டொமினிக்ஜீவா
S.விஜயாலயன்



**கணனி வடிவமைப்பு அச்சுப்பதிப்பு**
கரிகணன் பிறிண்டேர்ஸ்,
காங்கேசன்துறை சாலை,
யாழ்ப்பாணம்.

**வெளியீடு**
பாக்யா காகிதாதிகள்
இல.121, கே.கே.எஸ் வீதி,
கொக்குவில்.
தொ.பே:077 3053129


பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1) | Sentence Making III | 03 |
| 2) | கர்நாடக சங்கீதம் | 08 |
| 2) | யோகக் கலையும் பரதமும் | 11 |
| 3) | பெரிய தலை எடு | 14 |
| 4) | ஓவியக் கலை | 23 |
| 5) | விளையாட்டு விபத்துக்கள் | 26 |
| 6) | இராமாயணம் | 30 |
| 7) | இன்றைய நிலை வரையான... | 35 |
| 8) | இலங்கையின் வரலாறு | 39 |
| 9) | நம்பிக்கை வேண்டும் | 46 |
| 10) | இன்றைய உலகில் உருவாகி ..... | 50 |
| 11) | கணித அறிவுப் போட்டி | 54 |
| 12) | அறிவு காப்பாற்றுமா | 58 |
| 13) | விடுகதைகள் | 64 |


மாணவர்களே!
உங்கள் ஆக்கங்களை எழுதி அனுப்புங்கள்
தரமான ஆக்கங்கள் பிரசுரிக்கப்படும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கருடன்...

வாசக நண்பர்களே!

வணக்கம், முதல் தடவையாக உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. நாட்டின் சூழ்நிலை காரணமாக மாதந்தோறும் வெளிவரவேண்டிய இதழ்கள் காலதாமதமாக வருவதற்கு வருந்துகிறோம். வெகுவிரைவில் சீரான கால இடைவெளியில் இதழ்கள் வெளியிட முயற்சி எடுக்கின்றோம்.

பலநெருக்கடிகளுக்கு மத்தியிலும் எமது இதழை வெற்றிகரமாக கொண்டு நடத்துவற்கு முழுக்காரணம், வாசகர் களாகிய நீங்களே! அத்துடன் பலருக்கு நாம் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம். அவர்களுடைய பெயர்களை இங்கு குறிப்பிட்டால் 64 பக்கங்களையும் பயன்படுத்த வேண்டி வரும். அவ்வளவு பேருடைய உதவியாலும், ஒத்துழைப்பாலுந்தான் நாம் எமது இதழை தொடர்ந்து வெளியிட முடிகிறது. அவர்களுடைய விருப்பங்களுக்கு அமைவாக தரமாகவும், மாணவர்கள் பயன் பெறும் வகையிலும் எமது இதழ் தொடர்ந்து வெளிவரும் என்று இந்த சந்தர்ப்பத்தில் உறுதிபூணுகின்றோம்.

இப்பொழுது அனைத்துப் பொருட்களும் விமானம் மூலமாகவும், கப்பல் மூலமாகவுமே யாழ் குடாநாட்டை வந்தடை கின்றது என்பது நீங்கள் அறிந்ததே. அதனால் ஏற்படுகின்ற பாதிப்புக்களுக்கு நாம் மட்டும் விதிவிலக்கல்ல.

காகிதாதிகள் விலைஏற்றம் மை, மற்றும் அச்சுப் பதிப்பிற்குத் தேவையான இதர பொருட்களின் விலை ஏற்றம் காரணமாக அச்சுப்பதிப்பில் ஏற்பட்டுள்ள விலை ஏற்றம் எம்மை திக்குமுக்காட வைக்கிறது. அதனால் நாமும் எமது இதழின் விலையை அதிகரிக்க வேண்டிய இக்கட்டான சூழலுக்கு தள்ளப்பட்டுள்ளோம். இச்சந்தர்ப்பத்தில் எமக்கு உதவியும் ஆதரவும் அளித்து வரும் அனைவரும் தொடர்ந்து எமக்கு ஆதரவு அளிப்பீர்கள் என்ற நம்பிக்கையில் இந்த விலை அதிகரிப்பை மேற்கொண்டுள்ளோம்.

உண்மையை சொல்ல வேண்டுமாயின் ஒரு இதழை வெளியிட்டு விட்டோம் என்கின்ற திருப்தியைத் தவிர வேறு எதுவும் எமக்கு மிஞ்சப்போவதில்லை.


நன்றி, வணக்கம்.

இப்படிக்கு
- ஆர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *Sentence Making - 3*




பிரியா : நான் சந்தைக்கு செல்கின்றேன்.
மாலா : ஏன் ?
பிரியா : சில மரக்கறிகள் வாங்குவதற்கு.

In the above situation the purpose of going to the market is expressed by using **to buy** ( to + infinitive). We can use **to + infinitive** form to express purpose.

**to buy** (*to+infinitive*) tells us why Pria (*a person*) is going to the market ( *does something* ).

மேலுள்ள சந்தர்ப்பத்தில் பிரியா ஏன் சந்தைக்கு செல்கின்றார் என்பது *to buy some vegetables* எனும் *phrase* மூலம் மாலாவிற்கு சொல்லப்படுகின்றது.

ஆங்கிலத்தில் இதை ஒரே வாக்கியமாக எழுதும்போது verb உடன் what? , where? எனும் கேள்விகளைத் தொடர்ந்து why? எனும் கேள்வியை கேட்கும் போது அதற்கு வரும் விடையாக அமையும்.


நான் சந்தைக்கு சில மரக்கறிகள் வாங்கச் செல்கின்றேன். எனும் வசனமானது பின்வருமாறு

| Sub. | verb | what? | where? | *why?* | when? |
|---|---|---|---|---|---|
| I | am going | - | to the market | *to buy some vegetables*. | |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஆக ஒரு வாக்கியத்தில் verb ஆனது ஏன் நடைபெறுகின்றது எனும் கேள்வியைக் கேட்கும் போது அதற்குரிய விடையானது to + infinitive ( to go , to play , to write , to send etc. )எனும் வடிவத்தில் எழுதப்படலாம்.




மேலுள்ள விடயமானது ஒரு தனிவாக்கியமாக பின்வருமாறு எழுதப்பட முடியும்.





**Write why he or she does something in a single sentence. First one is done for you.**




*I am going to the post-office **to post** the letter.*


.................................................................................................





.................................................................................................




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




..............................................................................................................




..............................................................................................................




..............................................................................................................

**Say why the people did something follows (verb). Fill in the dotted lines.**

| Subject | verb | what? | where? | why? | when? |
|---|---|---|---|---|---|
| *I* | *bought* | *a pencil* | *at a shop* | *to draw some pictures* | *yesterday* |
| *Raja* | *went* | - | *to the clinic* | *to* ........................ | *last week.* |
| *Pria* | *came* | - | *home* | *to* ........................ | *yesterday* |
| *They* | *drew* | *a picture* | *on a bottle* | *to* ........................ | *last month* |
| *He* | *goes* | - | *to the church* | *to* ........................ | - |
| *She* | *wrote* | *a poem* | *at school* | *to* ........................ | *yesterday* |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**They are people who come to your house. Tell why they come to your house.**



*He is a postman.*

*He comes to my house to deliver the letters.*













**Pria needs some tools to do something. Can you tell why she needs those tools.**


1. She needs a knife *to cut the meat.*
2. She needs a key ____________
3. She needs a pair of scissors ____________
4. She needs a kettle ____________
5. She needs a sharpener ____________
6. She needs a tin opener ____________



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இந்த நான்கு அடையாள வில்லைகளில் ஒரு பேட்ச் மட்டும் வித்தியாசமாக உள்ளது. அது எது? எப்படி அது வித்தியாசமாக உள்ளது?



இங்குள்ள வட்டங்களுக்குள் 6 உயிரினங்கள் மறைந்துள்ளன. அவற்றைக் கண்டுபிடியுங்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அரும்பதவிளக்கம் :**

ஆரோகணம், அவரோகணம், அட்சரகாலம்

**அ) ஆரோகணம் :** சுருதியில் முறையே படிப்படியாக கீழிருந்து மேல்நோக்கி உயர்ந்து கொண்டு போகும் ஸ்வரத் தொகுதி ஆரோகணம் எனப்படும். இதனை ஆரோசை, ஏற்றம், ஆர்முடுகல் எனவும் அழைப்பர்.

உ+ம் :





**ஆ) அவரோகணம் :** சுருதியில் முறையே படிப்படியாக மேலிருந்து கீழ் நோக்கி குறைந்து கொண்டு போகும்




ஸ்வரத்தொகுதி அவரோகணம் எனப்படும். இதனை அமரோசை, இறக்கம், அமர்முடுகல் எனவும் அழைப்பர்.

உ+ம் :






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இ) அட்சரகாலம் :** பாடல்கள் எழுதுவதில் ஸ்வரங்களின் காலஅளவு எண்ணிக்கை அந்தப் பாட்டின் தாளத்தைப் பொறுத்து இருக்கும். இப்படிஅமைந்திருக்கும் ஸ்வரங்களின் கால எண்ணிக்கைக்கு அட்சரகாலம் என்று பெயர். அட்சரகாலமானது பாடல்கள் எழுதுவதில் மிக முக்கியமாக விளங்குகிறது. அட்சரம் என்றாலும் அட்சர காலம் என்றாலும் ஒன்றுதான். தாளத்தில் நாம் பயன்படுத்தும் அடிப்படையான எண்ணிற்கு அட்சரகாலம் என்று பெயர். அட்சரங்க ளின் எண்ணிக்கை தாளத்துக்குத் தாளம் மாறுபடும். சாதாரணமாக சதுஸ்ரஜாதியிலேயே அட்சரங்கள் குறிக்கப்படுகின்றன. ஆதி தாளத்திற்கு 8 அட்சரங்கள். ரூபக தாளத்திற்கு 6 அல்லது 3 அட்சரங்கள். இவ்வாறே மற்றைய தாளங் களிற்கும் அட்சரங்கள் மாறுபடும்.

அலகு : சிறுவர் பாடல்

உப அலகு : "குழந்தையாக"

இராகம் : ஹிந்துஸ்தான்பெஹாக்

தாளம் : ஏகம் (திஸ்ரநடை)

சிறுவர் பாடல்களானது சிறுவரது குறும்புத் தனத்தையோ, அவர்களது விளையாட்டுக்களைப் பற்றியோ, அவர்களது விருப்புக்களைப் பற்றியோ விளக்கும் தன்மையுடையனவாகவும் எளிய சொற்களால் ஆனவையாகவும் இருக்கம். இப்பாடலில் கண்ண னைப் பற்றியும் அவனது குறும்புச் செயல்கள், விளை யாட்டுக்கள் பற்றி யும் வர்ணிக்கப்பட்டுள்ளது.

அலகு : அரும்பதவிளக்கம்

உபஅலகு : குறில், நெடில் ஸ்வரங்கள்

**குறில் ஸ்வரம் :** குறுகிய ஓசையையுடைய ஸ்வரங்கள் குறில்ஸ்வரம் எனப்படும். இது ஒரு அட்சரகால எண்ணிக்கையைக் கொண்டது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ + ம் : ஸரிகம. இதன் அட்சரகால எண்ணிக்கை 4.

**நெடில் ஸ்வரம் :** நீண்ட ஓசையையுடைய ஸ்வரங்கள் நெடில் ஸ்வரம் எனப்படும். இது இரண்டு அட்சரகால எண்ணிக்கையைக் கொண்டது.

உ + ம் : ஸாரீகாமா. இதன் அட்சரகால எண்ணிக்கை 8.

**இசைக்கலைமணி சங்கீத கலா வித்தகர்**
**திருமதி. சக்திதேவி சிவகுமார், யாழ் இந்துமகளிர் கல்லூரி.**



**வர்ணம் தீட்டுங்கள்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகக் கலையும் பரதமும்

சென்ற இதழ் தொடர்....

தளர்வுப் பயிற்சியினூடாக நடனத்தையும் அதனூடாக யோகத்தினைப் பெறும் வழியினையும் பற்றி நாம் முன்னைய தொடரில் பார்த்தோம். இங்கு வாழ்க்கையின் சவால்களை எதிர்கொள்ள முடியாதவர்களதும், குறைந்த பட்சம் மனத்தாக்கத்திற்கு உள்ளாகியவர்களதும், சமநிலை குழம்பிய குறைந்த பட்சத்து சிறுவர்களையும் உதாரணமாக நாம் நோக்கிய போது அவர்கள் ஒவ்வொரு விதமாக அசையவிடப்பட்டனர்.

இங்கு அசைவுகளுக்கு பயன்படுத்தப்பட்ட அடவுகளுக்கு இசைமுக்கியத்துவம் பெற்றது. இங்கு பயன் படுத்தப்படும் ராகம் மென்மையாக வீச வேண்டும். இந்த இசை பயன்பாடு பற்றியும் அவை பயன்படுத்தப் படுவதற்கு தகுதியானவையா அல்லது குழப்ப நிலையில் உள்ளவர்களை மேலும் குழப்புமா? என்பன பற்றியெல்லாம் ஆய்வு செய்து முடிவில்



தளர்ச்சிக்குரிய ராகங்களாக சில ராகங்கள் கூறப்பட்டன. அவை உளவியல் ரீதியான குழப்பங்களிலிருந்து விடுபடுவதற்கு ஒரளவாவது உதவியதா? எந்தளவிற்கு அவற்றின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்கம் இருந்தது. என்பதை ஆய்வு செய்தவர். இந்தியாவில் மைசூரில் உள்ள ஸ்ரீ கணபதி சச்சிதானந்த சுவாமி ஆவர். அவரது ஆச்சிரமத்தில் மன ஆறுதல் தேடி வருபவர் களுக்கு பல ராகங்களை இசைக்க வைத்து மன அமைதி மற்றும் பல நோய்களையும் குணமாக்கி யுள்ளனார்.

| நோய் | தளர்ச்சி ராகம் |
|---|---|
| மனஉளைச்சல் | அமிர்தவர்சினி |
| கோபம், ஓய்வின்மை | சிவரஞ்சினி, சாருமதி |
| மன உளைச்சல் | கல்யாணி, சாமா, சாருகேசி |
| மனஅமைதி | சக்ரவாகம், ஹேமாவதி, சித்தரஞ்சனி |
| உளைச்சல் | சாரங்கி, பந்துவராளி |

இதனைவிட பல்வேறுபட்ட நோய்களைக் குணப்படுத்துவதற்காக, வேறு பலதரப்பட்ட ராகங் களைப் பயன்படுத்தியிருந்த தன்மையையும் நாம் நோக்கலாம். இவ்வகை ராகங்களை அதன் இயல்புக்கு ஏற்ற முறையில் பயன்படுத்தல்,அதன் அசைவுகளை சேர்த்து அசைதல் அல்லது ஆடுதல் என்பன இங்கு முன்னெடுக்கப்படுகின்றன.

மனமானது தனது அமைதியை இழந்து ஆசை, பயம், கவலை, கோபம், இம்மாதிரியான உணர்ச்சி களுக்கு ஆளாகிவிடுமானால் அதன் இயல்பான பார்வை மாறிவிடும். தெளிவற்ற நிலையிலிருந்து தெளிவான நிலைக்கு வருவதற்கு நாம் எந்த விடயத்தையும் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் உற்று நோக்கல் கூடாது. அமைதியான நிலையில் சிந்திக்க வைக்க இசையுடன் கூடிய தளர்ச்சி அசைவு உதவுகின்றது. அதாவது மனதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்பான நிலைக்குக் கொண்டு வருவதற்கு உடலைத் தளர்ச்சி நிலைக்கு கொண்டு வருதல் வேண்டும். அவ்வாறு கொண்டுவர உதவும் வழிமுறைக்கு இத் தளர்ச்சிப் பயிற்சி உதவலாம்.

ஆற்றுப்படுத்தல் முறையில் இதுவும் ஒன்று. இலகு அன்னியமாதல் அதாவது தனிமைப்படுத்தல் குறைகின்றது. கூட்டு முயற்சியான அசைவு அன்னியமாதலைத் தவிர்க்கின்றது. அப்போது உளநெருக்கீட்டு வீரியம் குறையும் ஆத்மீகமும், விஞ்ஞானமும், இணைந்து நிற்பதின் இடைவெளியினை இவ்விசையுனூடாக செய்யப்படும் பரத ஆடல், அசைவு, குறைந்தது அதற்கான பாலத்தினை அமைக்கிறது எனவும் நோக்கலாம்.

சிலரது சூழலிற்கும், அவர்களது வயதிற்கும் ஏற்ப பயிற்சிகளை வழங்கலாம். இங்கு சீர்மியம் செய்பவரில் நோயாளர் நம்பிக்கை வைத்திருத்தல் மிக முக்கியமாகும். இங்கு ஒவ்வொருவரையும் தனித்தனியாக ஆய்வு செய்ய வேண்டும் பின் தனிமைப்படுத்தலின் ஒவ்வொரு கட்டங்களையும் அவதானிக்க வேண்டும். பின் சிகிச்சை அளித்து கடும் உணர்வுகளைக் கூட உடல் அசைவினூடாகக் கட்டுப்படுத்தலாம்.

எனவே நன்கு திட்டமிடப்பட்டு வடிவமைக்கப்பட்ட நடனச் சிகிச்சை முறையானது ஒருவரது சுய அசைவின் விழிப்புணர்வு விஷேட உணர்வு, உறவு நிலைகளில் முன்னேற்றம் கொள்கை விழிப்புணர்வு, என்பவற்றுடன் நிறங்கள், வடிவங்கள், திசைகள், நிலைமாறும் பிறபொருட்கள் ஆகியவற்றைக் கட்டியெழுப்புவதினை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

திருமதி.மோகனா பாலசுப்பிரமணியம்
யா / சுண்டிக்குளி மகளிர் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெரிய தலை எடு

ஓர் ஊரில் உழவன் ஒருவன் இருந்தான். அவன் வெள்ளாடு ஒன்றையும் செம்மறி ஆடு ஒன்றையும் வளர்த்து வந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோஞ்சனாக இருந்த வெள்ளாடு வீரத்துடன் விளங்கியது. வலிமை மிகுந்த செம்மறி ஆடோ கோழையாக இருந்தது. அந்த ஆடுகள் இரண்டும் எப்பொழுதும் ஒன்றாகவே இருந்தன.

உழவன் வீட்டுத் தோட்டத்தில் அழகிய பூச்செடிகள் இருந்தன. இரண்டு ஆடுகளும் அவற்றைக் கடித்தன.

இதனால் கோபம் கொண்ட அவன் "ஆடுகளே! இனி நீங்கள் இங்கே இருக்கக்கூடாது. எங்காவது ஓடி விடுங்கள். என் கண்ணில் பட்டால் உங்களைக் கொன்று விடுவேன்" என்று அவற்றை அடித்து விரட்டினான்.

எங்கே செல்வது என்று அந்த ஆடுகளுக்குத் தெரியவில்லை. தங்களுக்குத் தேவையான பொருட்களை ஒரு சாக்குப் பைக்குள் போட்டன. அந்தப் பையைத் தூக்கிக் கொண்டு புறப்பட்டன.

ஊரைக் கடந்து காட்டு வழியாக அவை பேசிக் கொண்டே நடந்தன. இறந்து போன ஓநாய் ஒன்றின் தலை வழியில் கிடந்தது. இரண்டும் அதைப் பார்த்தன.

"செம்மறி ஆடே! அந்த ஓநாயின் தலையை எடுத்துப் பைக்குள் போடு என்னை விட நீதான் வலிமையானவன்" என்றது வெள்ளாடு.

"ஐயோ! ஓநாயின் தலையைப் பார்த்தாலே எனக்கு நடுக்கமாக உள்ளது. நீதான் எதற்கும் அஞ்சாத வீரன் ஆயிற்றே. நீயே ஓநாயின் தலையை எடுத்துப் பைக்குள் போடு" என்றது செம்மறி ஆடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

' நாம் இருவரும் சேர்ந்தே அதைப் பைக்குள் போடுவோம். நான் உன்னுடன் இருக்கிறேன். இனிமேல் எதற்கும் அஞ்சாதே" என்றது வெள்ளாடு.

அவை இரண்டும் சேர்ந்து ஓநாயின் தலையை எடுத்தன. பைக்குள் போட்டன. அந்தப் பையைத் தூக்கிக் கொண்டு நடந்தன.

இரண்டிற்கும் பசி வயிற்றைக் கிள்ளியது.

உணவு எங்காவது கிடைக்குமா என்று நாலா பக்கமும் பார்த்தது வெள்ளாடு. சிறிது தொலைவில் நெருப்பு எரிவது அதற்குத் தெரிந்தது.

"செம்மறி ஆடே! அங்கே நெருப்பு எரிகிறது பார். நாம் அங்கே செல்வோம். குளிருக்கு இதமாக இருக்கும். ஏதேனும் உணவு கிடைத்தாலும் கிடைக்கும். ஓநாய்களிடம் இருந்தும் தப்பித்துக் கொள்ளலாம்." என்றது அது.

" நீ என்ன சொல்கிறாயோ அப்படியே செய்கிறேன்." என்றது செம்மறி ஆடு.

இரண்டும் நெருப்பு இருந்த இடத்தை நெருங்கின.

அங்கே மூன்று ஓநாய்கள் இருந்தன. அவை உணவு சமைத்துக் கொண்டிருந்தன.


ஓநாய்களைப் பார்த்த ஆடுகள் இரண்டும் அதிர்ச்சி அடைந்தன. அந்த ஓநாய்களும் ஆடுகளைப் பார்த்து விட்டன.

"தப்பிக்க வழி இல்லை. ஓடினால் ஓநாய்கள் நம்மைக் கொன்றுவிடும். அவற்றை ஏமாற்றித்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் சைக்கிளில் அடிபட்டவரைப் பார்த்து சைக்கிளில் வந்தவர் கூறியது




தப்பிக்க வேண்டும். அதற்கு என்ன செய்வது" என்று சிந்தித்தது. வெள்ளாடு.

பையை வைத்திருந்த செம்மறி ஆடோ ஓநாய் களைப் பார்த்து நடுங்கியபடி நின்றது.

ஓநாய்களைத் துணிவுடன் பார்த்த வெள்ளாடு "நண்பர்களே! எல்லோரும் நலந்தானே" என்று கேட்டது.

இதனால் கடுப்பு அடைந்த ஓநாய் ஒன்று, " நாங்கள் உனக்கு நண்பர்களா? எங்கள் உணவு தயார் ஆகட்டும். பிறகு உங்கள் இருவரையும் கவனிக்கிறோம். எங்கே ஓடிவிடப் போகிறீர்கள். உங்களுக்கும் விருந்து வைக்கிறோம்" என்றது.

அந்த ஓநாய்களை ஏமாற்ற நல்ல வழி ஒன்று வெள்ளாட்டிற்குத் தோன்றியது.

"ஓநாய்களே! நாங்கள் யார் என்பது தெரியாமல் திமிராகப் பேசுகிறீர்கள். செம்மறி ஆடே! இன்று நாம் எத்தனை ஓநாய்களைக் கொன்றோம். அவற்றின் தலைகளைப் பைக்குள் வைத்துள்ளோமே. அவற்றில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தலையை எடுத்து இந்த ஓநாய்களிடம் காட்டு. நம்மைப் பற்றித் தெரிந்து கொள்ளட்டும் என்றது.

வெள்ளாட்டின் சூழ்ச்சி செம்மறி ஆட்டிற்குப் புரிந்தது. பைக்குள் கையை விட்ட அது ஓநாயின் தலையை எடுத்தது. அந்தத் தலையை ஓநாய்களிடம் காட்டியது.

இதைப்பார்த்த மூன்று ஓநாய்களும் அதிர்ச்சி அடைந்தன.

"ஏ முட்டாள் ஆடே! உன்னிடம் என்ன சொன்னேன்? பெரிய ஓநாயின் தலையை எடுத்துக் காட்டு என்றேன். நீயோ சிறிய தலையை எடுத்துக் காட்டுகிறாய். இதைப் போட்டு விட்டுப் பெரிய தலையை எடு" என்று கத்தியது வெள்ளாடு.

செம்மறி ஆடு அந்தத் தலையைப் பைக்குள் போட்டது. வேறு தலையை எடுப்பது போல மீண்டும் அதே தலையை எடுத்தது.

கோபம் கொண்டது போல நடித்த வெள்ளாடு "உனக்கு அறிவே இல்லையா? ஓநாய்த் தலைகளில் பெரியதை எடு என்கிறேன். நீயோ சிறிய தலைகளையே எடுத்துக் காட்டுகிறாய். இதைப் போட்டு விட்டுப் பெரிய தலையாக எடுத்துக் காட்டு" என்று அதட்டியது.

அந்தத் தலையைப் பைக்குள் போட்டது செம்மறி ஆடு. பைக்குள் கையை விட்டுத் துழாவுவது போல நடித்தது. மீண்டும் அதே தலையை வெளியே எடுத்தது.

மூன்று ஓநாய்களும் இதைப் பார்த்தன. அந்தப் பைக்குள் நிறைய ஓநாய்த் தலைகள் இருப்பதாக நினைத்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்த ஆடுகளை மற்ற ஆடுகளைப் போல நினைத்து விட்டோமே. இவை இரண்டும் நிறைய ஓநாய்களைக் கொன்று உள்ளன. பை நிறைய ஓநாய்த் தலைகளை வைத்துள்ளன.

இவற்றிடம்சிக்கினால் நம்மையும் கொன்று விடும். எப்படியாவது தப்பித்து ஓடிவிட வேண்டும்" என்று மூன்றும் நினைத்தன.

ஆடுகளைக் கேலி செய்த ஓநாயை மற்ற இரண்டு ஓநாய்களும் பார்த்தன. "ஓநாயே! நீ இந்த ஆடுகளிடம் முரட்டுத்தனமாகப் பேசி இருக்கக் கூடாது. அவற்றிடம் மன்னிப்புக் கேள்" என்றன.

"நான் இந்த ஆடுகளிடம் முரட்டுத்தனமாக ஏதும் பேசவில்லை. இனிமையாகத்தான் பேசினேன். நான் பேசியதில் தவறு இருந்தால் வருந்துகிறேன்" என்றது அந்த ஓநாய். அதன் பிறகு மூன்று ஓநாய்களும் ஏதும் பேசவில்லை.

அமைதியைக் கலைத்த ஓநாய் ஒன்று "ஆடுகளே! நீங்கள் இங்கு வந்ததில் எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி. நீங்களும் எங்களுடன் சேர்ந்து விருந்து சாப்பிட வேண்டும்.

அடுப்பில் உள்ள பாத்திரத்தில் குழம்பு கொதிக்கிறது. அதில் சிறிது தண்ணீர் ஊற்ற வேண்டும். அப்பொழுதுதான் குழம்பு சுவையாக இருக்கும். நான் சென்று தண்ணீர் கொண்டு வருகிறேன்" என்று புறப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிது நேரம் சென்றது. அந்த ஓநாய் திரும்ப வில்லை. அது தப்பித்து ஓடி விட்டது என்பதை அறிந்தது இரண்டாவது ஓநாய், தானும் தப்பிக்க நினைத்தது.

"ஆடுகளே! அந்த ஓநாய்க்கு அவசரம் தெரியாது. தண்ணீர் கொண்டு வரவா இவ்வளவு நேரம்? நான் சென்று அந்த ஓநாயை அழைத்துக் கொண்டு தண்ணீருடன் வருகிறேன்" என்று புறப்பட்டது.

'இரண்டு ஓநாய்களும் தம்பித்து விட்டனவே. நாம் எப்படி இந்த ஆடுகளிடம் இருந்து தப்பிப்பது' என்று சிந்தித்தது மூன்றாவது ஓநாய்.

"ஆடுகளே! நான் சென்று அந்த இரண்டு ஓநாய்களையும் அழைத்து வருகிறேன். தண்ணீரும் எடுத்து வருகிறேன். என்னை நம்புங்கள்" என்று அங்கிருந்து புறப்பட்டது.

சிறிது தொலைவு நடந்தது அது. தப்பித்தேன் என்ற மகிழ்ச்சியில் ஓட்டம் பிடித்தது.

"செம்மறி ஆடே! நம் திட்டம் வெற்றி பெற்று விட்டது.ஓநாய்களிடம் இருந்து தப்பித்து விட்டோம். இங்குள்ள உணவை வயிறார உண்போம். உண்மை தெரிந்து அந்த ஓநாய்கள் இங்கே வரும். அதற்குள் நாம் இங்கிருந்து சென்று விட வேண்டும்" என்றது வெள்ளாடு.

அங்கிருந்த உணவை இரண்டு ஆடுகளும் வயிறு முட்ட உண்டன. பையைத் தூக்கிக் கொண்டு ஏப்பம் விட்டபடியே அங்கிருந்து புறப்பட்டன.

ஆடுகளக்கு அஞ்சி ஓடிய மூன்று ஓநாய்களும் ஓரிடத்தில் சந்தித்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றில் ஒரு ஓநாய் "ஆடுகளுக்கு அஞ்சியா நாம் ஓடி வந்தோம்?" என்று கேட்டது.

"நம்மால் கொன்று தின்னப்படுபவை ஆடுகள். அவற்றால் எப்பொழுதும் ஓநாய்களைக் கொல்ல முடியாது. நம்மை அவை ஏமாற்றி உள்ளன. நாமும் ஏமாந்து விட்டோம்" என்றது இன்னொரு ஓநாய்.

"ஓநாய்த் தலையைக் காட்டி அவை நம்மை ஏமாற்றி விட்டன. இப்பொழுதே நாம் மூவரும் அங்கே செல்வோம். அந்த ஆடுகளைக் கொன்று தின்போம்" என்றது மூன்றாவது ஓநாய்.

மூன்று ஓநாய்களும் கோபத்துடன் அங்கு ஓடி வந்தன. தாங்கள் சமைத்த உணவை ஆடுகள் உண்டு விட்டன. அங்கிருந்து சென்று விட்டன என்பதை அறிந்தன.

ஏமாந்த ஓநாய்கள் மூன்றும் கோபத்தால் பற்களை நறநறவென கடித்தன.

பாவம் அந்த ஓநாய்கள். அன்று முழுவதும் உணவின்றிப் பசியால் வாடின.

**54 ஆம் பக்க வினாக்களுக்கான விடைகள்**

| | | |
|---|---|---|
| 01. 15 | 08. $45^0, 45^0, 90^0$ | 15. 16, 25 |
| 02. y = 0 | 09. 13,14,15 | 16. $2\frac{13}{16}$ |
| 03. ரூபா 8000 | 10. 55 | 17. 5 |
| 04. 34 | 11. 13 | 18. 1 மணித்தியாலம் |
| 05. 45 | 12. (Y+X) வருடங்கள் | 19. ரூபா 15,360 |
| 06. 9 | 13. ரூபா 206.40 | 20. 48 m |
| 07. 222.22 | 14. 50 | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர்களுக்கான வார்த்தை விளையாட்டு -07

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | தி | | 2 | | |
| | | ர் | | 3 | | |
| | | 4 ஊ | 5 | | | |
| | 6 | | | | 7 | 8 |
| | 9 | 10 | | | | |
| | | | | | | 11 |
| 12 | | | | | | |

| | |
|---|---|
| துலாம் | கிட்டி |
| பசி | ஜப்பான் |
| ஊடல் | நாண் |
| அகர்தலா | **ஊர்தி** |
| அது | பக்குவம் |
| திகில் | அட்டிகை |
| ஜனாதிபதி | கழுகு |
| வான் | டயர் |
| அவா | நாம் |

**மாணவர்களே!**

உங்கள் புத்திக்கூர்மையை பிரயோகித்து தரப்பட்ட சொற்களில் இருந்து, இடைவெளிகளுக்குப் பொருத்தமான சொற்களை தெரிந்தெடுத்து நிரப்பி 01-08-2007ஆம் திகதிக்கு முன்பாக எமக்கு அனுப்பி வையுங்கள். வெற்றி பெறும் முதல் பத்து அதிர்ஸ்டசாலிகளுக்கு பரிசில்கள் வழங்கப்படும்.

அனுப்பவேண்டிய முகவரி:

**பாக்யா காகிதாதிகள், இல.121, கே.கே.எஸ் வீதி,**

**கொக்குவில்.**

### வார்த்தை விளையாட்டு விண்ணப்பப் படிவம்

பெயர் :.......................................................................................................

வகுப்பு :..................................................... பிரிவு:..............................


பாடசாலை :...................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலங்கை ஓவியர்: ஜே.டீ.ஏ.பெரேரா**

1897இல் கம்பஹா பிரதேசத்தில் பிறந்த J.D.A பெரேரா அவர்கள் இலங்கையின் கலைத்துறையின் வளர்ச்சிக்காக முன்னின்று பாடுபட்டுள்ளார். இவரே இலங்கையில் கலைக்கல்வியின் பொருட்டு அரசினர் நுண்கலைக் கல்லூரியை ஆரம்பிப்பதற்கு முன்னின்று பாடுபட்டார். இவரே இதன் முதல் அதிபரும் ஆவார். இன்று இக்கலைக் கல்லூரி களணி பல்கலைக்கழகத்தின் நிறுவகமாக வளர்ச்சியடைந்துள்ளது.



# ஓவியக் கலை

ம.டொமினிக்
புனித சாள்ஸ் மகாவித்தியாலயம்

இவர் ஐரோப்பிய நாடுகளில் கண்காட்சிகளை நடாத்தி உள்ளார். இங்கிலாந்து றோயல் அக்கடமியில் அங்கத்துவம் பெற்றவர். இவர் பிரதிமைச் சித்திரங்களை எண்ணெய் வர்ணத்தில் வரைவதில் வல்லவர். இவரால் வரையப்பட்ட சித்திரங்கள் சில

1. சந்திரலேகா - பிரதிமைச் சித்திரம்
2. பீ.எஸ்.குணரட்ண பிரதிமைச்சித்திரம்
3. பச்சை வர்ணச் சேலை அணிந்து அமர்ந்து இருக்கம் பெண் - கலாபனத்தில் உள்ளது.
4. வெளிநாட்டு யுவதி - பிரதிமைச்சித்திரம்
5. நடனமாது

இச்சித்திரங்கள் கன்வஸ்சில் எண்ணெய் வர்ணத்தில் வரையப்பட்டவை. இவர் தனிநபர் குறைப்பண்பு களை பிரதிமைச் சித்திரங்களில் வெளிக் காட்டவதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லவர் கோட்பாடுகளை முறையாகக் கைக் கொண்டு உள்ள சித்திரங்களின் பின்னனிக்கு இருள் தன்மை கொண்ட வர்ணத்தினால் தூரிகைத் தடங்கள் உபயோகிக்கப்பட்டு உள்ளன. இத்தூரிகைத் தடங்கள் தடிப்பான தன்மையைக் கொண்டுள்ளது.

**மேலைத்தேச ஓவியர்: கென்றி ஸ்பென்சர் மூர் (1898 - 1986)**

1898 இங்கிலாந்தில் ஜேக்சர் என்னும் இடத்தில் பிறந்த ஹென்றி மூர் பிரபல்யம் பெற்ற சிற்பக் கலைஞர் இவர் 24 வயதில் தான் கல்வி கற்ற றோயல் கல்லூரியில் ஆசிரியத் தொழிலை மேற்கொண்டார்.

சிற்பக் கலையில் ஆர்வம் கொண்ட ஹென்றிமூர் புதிய பாணிகளைக் கையாண்டு சிற்பங்களை நிர்மாணித்தார். இயற்கை அமைப்பில் நின்று மாறு பட்ட புதுமை அடிப்படையில், தனது மன எழுச்சிக்கு ஏற்ப ஆக்கத்தை உருவாக்கும் ஆற்றல் பெற்றவர்.

இவர் கல், ஈயம், மரம், உலோகம், பிளாஸ்ரிக் போன்ற ஊடகங்களை தமது ஆக்கங்களுக்கு உபயோகித்துக் கொண்டார்.

பெரும்பாலும், உலோகத்திலேயே வடிவமைத் தார். இவரது சிற்பங்ககள் பூந்தோட்டங்களை அலங் கரிப்பதற்கு பெரும்பாலும் உபயோகிக் கப்பட்டன.

இவரது ஆக்கங்களில் காணப்படும் விஷேச பண்பு சரீரத்தின் சக்தி பொருத்திய பகுதிகளை விஷேசமாக எடுத்துக் காட்டுவதாகும்.

ஆக்கங்களில் சில

1. தாயும் சேயும் 2. பெண் 3. குடும்பம்
4. அரசனும் அரசியும் 5. குருவியும் முட்டையும்
6. துயில் நிலைகள் சாய்ந்து இருக்கும அமைப்புக்களில் செய்த சிலைகள் பல உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. Age considers, youth ventures.
முதுமை எண்ணுகிறது. இளமை துணிகிறது.

02. All is well that ends well.
நன்மையால் முடிபவை யாவும் நல்லதே.

03. Hasty climbers have sudden falls.
விரைவாகப் படியேறுவோர் திடீரென வீழ்வர்.

04. Anger punishes itself.
தன்னையே கொல்லும் சினம்.

05. Don't count your chickens before they are hatched.
முட்டை பொரியும் முன் குஞ்சுகளை எண்ணாதே.

## ஆங்கிலப் பழமொழிகளும் இணையான தமிழ்ப் பழமொழிகளும்

06. Things are not always what they seem.
இக்கரைக்கு அக்கரை பச்சை.

07. An apple a day keeps the doctor away.
ஒரு நாளைக்கு ஒரு ஆப்பிள் தின்றால் ஓடவேண்டாம் வைத்தியரிடம்.

08. Art is indeed not the bread but the wine of life.
கலை சோறூட்டாவிட்டாலும், சோர்வூட்டாது.

09. Many can argue; not many converse.
வாதம் பேசல் எளிது, பேதம் இன்றி உரையாடல் அரிது.

10. Lose nothing for want of asking.
கேட்கத் தயங்கி எதையும் இழக்காதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விளையாட்டு

பாடசாலைகளில், விளையாட்டு மைதானங்களில் நிகழும் விபத்துக்களில் பெரும்பாலானவை விளையாட்டு விபத்துக்குள்ளாகும். உதைப்பந்தாட்டத்திடல், கிறிக்கெட்பிச், கரப்பந்தாட்டத்தளம், குண்டுபதியும் தளம், வலைப் பந்தாட்டத்தளம், கூடைப் பந்தாட்டத்தளம், தசைப் பயிற்சித் தளம், மெய்வல்லுநர் தளம் என்பன பல்வேறு விளையாட்டு இடங்களாகும். இந்த நிலையங்களிற் காணப்படும் தடைகளும் மைதானத்தின் தன்மையும் விபத்துக்களுக்கு காரணமாகும். இது போன்று பயன்படுத்தும் உபகரணங்களும் விபத்துக்களை உண்டாக்கும்.

இவற்றுக்குச் செய்முறைப் பிழைகள் ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்புக்குள் பல்வேறு நிகழ்ச்சிகள் பல்வேறு தன்மையுடையோர் பயிற்சிகளில் ஈடுபடல் வழிகாட்டல், மேற்பார்வையின்மை, அசட்டுத்தனம், பொறுப்பின்மை, ஆற்றலுக்கப்பால் செயல்புரிய முனைதல் ஆகியவற்றாலும் விபத்துக்கள் ஏற்படுகின்றன.

பாடசாலை மைதானங்களில் ஏற்படக்கூடிய விபத்துக்களுக்குக் காரணமாக இருக்கக் கூடிய காரணிகள்

1. தகுதியற்ற விளையாட்டுத் தளங்கள்
2. பொருத்தமில்லாத உபகரணங்கள்
3. பிழையான செயல்முறை, வழிகாட்டல் மேற்பார்வையின்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபத்துக்கள்

4. வேறு காரணிகள்

மேற் கூறப்பட்ட காரணிகளால் மைதான விபத்துக்கள் ஏற்பட்டால் அவை எப்படியான ஊறுகளை விளைவிக்கும் என்று தீர்மானிக்க முடியாது.

**பொதுவாக ஏற்படக்கூடிய ஊறுகள் :**

1. தோல் உரஞ்சல், தடக்கி விழல், சறுக்கிவிழல்
2. சிறுகாயங்கள் - குருதி வெளிப்படல்
3. உபகரணங்கள் வெட்டுக்காயம், உடலில் உபகரணங்கள் பட்டுக்காயம், தடக்கி வீழ்ந்து கட்டை கல்லு பிற பொருட்கள் குத்துதல் மோதிக் காயம் ஏற்படல்
4. எலும்பு முறிவு, வீழ்ந்து முரட்டுத் தன்மையாக நடத்தல்
5. மூட்டுவிலகல், மயக்கம், மூர்ச்சித்தல்
6. சிக்கலான முறிவுக் காயம் மைதானம் சீரின்மை முரட்டுத்தனம், போட்டி மனப்பான்மை
7. தசைநோ அல்லது பிடிப்பு வீழ்ந்து உள் உறுப்புக்கள் பாதிப்படைதல், நரம்புச் சுளுக்கு
8. தலை சுற்றல், இரத்தக் கண்டல்

இவை விளையாட்டு மைதானத்தில் விளையாடும் போது மாணவர்களுக்கு ஏற்படும் ஊறுகளாகும்.

மைதானங்களில் நாளாந்தம் ஊறுகள் விளைவிக் கப்படுகின்றன. இதனை நாம் நன்கு கண்டும் உணர்ந்தும் உள்ளோம். இவற்றை தடுப்பதற்கு சில நடைமுறை களைக் கைக்கொள்ள வேண்டும். உ+ம் : மைதானத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு குழி இருந்தால் அதை மூடிவிடவேண்டும். கற்கள் முட்கள் இருப்பின் அகற்ற வேண்டும். அப்போது மைதானத்தல் ஏற்படும் விபத்துக்களை ஓரளவு குறைத்துக் கொள்ள முடியும். அடுத்து மைதானத்தில் விளையாடும் மாணவர்களாக இருந்தாலும் சரி விளை யாடும் வீரராக இருந்தாலும் சரி போட்டி மனப்பான்மை இன்றி விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை சகிப்புத் தன்மை என்பவற்றுடன் நடந்து கொள்ள வேண்டும் இதனாலும் விபத்துக்கள் நடக்காமல் இருக்க முடிகிறது.

இந்த மனப் பாங்கில் விளையாட்டு வீரர்கள் சில வழிமுறைகளை மேற்கொண்டால் பெரும்பாலான விபத்துக்கள் தடுக்கப்படலாம்.

**கைக்கொள்ளக் கூடிய தடுப்பு முறைகள்**

1. கடினமான இறுக்கமான மைதானங்களில் பொறுமையைக் கடைப்பிடித்தல்.
   நாளாந்தம் மைதானத்தில் விளையாடும் போது ஒரு முறை சுற்றிப் பார்த்தல். சிறுகுழிகள், கட்டைகள், பூடுகள் இருப்பின் நிறுத்தி அவற்றை துப்பரவாக்குங்கள். விளையாட்டு உபகரணங்களை மிகவும் அக்கறையுடன் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளித்துப் பாவியுங்கள்.

- பொருத்தமில்லாத உபகரணங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.
- பிழையான செயல் முறைகளை பின்பற்றக் கூடாது முரட்டுத்தனம், வீராப்பு ஏனோ தானோ மனப்பாங்கைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்
- ஆதரவாளர்களின் தூண்டலுக்கு உணர்ச்சி வசப்படாதீர்கள்.
- கஷ்டமான சிக்கலான செயல்களைத் தவிர்க்கவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு செயலைச் செய்ய முன் சிந்திக்க வேண்டியவை
1. எனக்கு ஏற்ற செயலா
2. இச் செயலை செய்வதில் தீங்கு எனக்கு மட்டுமல்ல பிறருக்கும் ஏற்படுமா?
3. வழிகாட்டடல் அல்லது மேற்பார்வை வேண்டாமா என சிந்திக்க வேண்டும்.

இறுதியாக போட்டி அமைப்பாளர்கள் போட்டிக்கான மைதானத்திற்கு பாதுகாப்பு உத்தரவாதம் அளிக்க வேண்டும். மழையால் வெள்ளம் ஏற்பட்ட நிலையில் போட்டிகளைத் தொடரக்கூடாது.

பாயும் கிடங்குகள் மணல் நன்கு பரப்பப்பட்டு, போட்டியாளருக்கு ஊறுகளை விளைவிக்காதவாறு பார்த்தல் வேண்டும். ஓட்டப்பாதைகளை ஒழுங்காகவும் பிரமாணத்தின் படியும் ஏற்படுத்த வேண்டும். எப்போதும் உதவிச் சாதனங்களையும் ஒரு வைத்திய அதிகாரியையும் கைவசம் வைத்துக் கொள்ள வேண்டும்.

உபகரணங்களைச் சீராகவும் தகைமையுடையனவர்கவும் போட்டியாளருக்கு வழங்க வேண்டும். பார்வையாளர்களும் ஆதரவாளர்களும் விளையாட்டு வீரர்களை உற்சாகப்படுத்தும் போது விளையாட்டு நல்ல முறையில் அமைவதற்கான உந்துதலாகவும் தூண்டுதலாகவும் இருக்க வேண்டும். எவ்வகையிலும் ஆட்டக்காரரை மூர்க்கத்தனமாக தூண்டும் உற்சாகங்களை மேற்கொள்ளக் கூடாது. இதனால் பங்கு பற்றுவோரே பாதிக்கப்படுவார்கள். எனவே உற்சாகம் கொடுக்கும் போது வீரர்களை மகிழ்ச்சியாகவும் விறுவிறுப்பாகவும் விளையாடக் கூடயவராக்க வேண்டும். மேற்கண்ட நடைமுறைகளைக் கைக்கொள்ளும் போது விளையாட்டு விபத்துக்களிலிருந்து பாதுகாப்பு பெற்றுக் கொள்ளலாம் என்பது உறுதி.

Miss.S.சின்னத்துரை
யாழ் /வைத்தீஸ்வராக் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அரக்கன் இராவணனின் தங்கை சூர்ப்பனகை ஆவாள். அவள் பஞ்சவடி அமைந்திருந்த காட்டில் தங்கி இருந்தாள்.

உலா வந்த அவள் தற்செயலாக இராமனைப் பார்த்தாள். அவன் பேரழகில் மயங்கித் தன்னை மறந்தாள். எப்படியும் அவனை அடைய நினைத்தாள்.

# சூர்ப்பனகையின் மோகம்

இராமாயணம் சென்ற இதழ் தொடர்....

மாய மந்திரங்களில் வல்லவளான அவள் பேரழகியாக வடிவம் எடுத்தாள். அழகுப் பதுமை போல மெல்ல நடந்து இராமனின் அருகில் வந்தாள்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அன்பரே! அரக்கர்களின் அரசனான இராவணனின் தங்கை நான். என் சகோதரர்களான கரனும் தூடணனும் இந்தப் பகுதியை ஆளுகிறார்கள்.

உங்கள் மீது நான் காதல் கொண்டு விட்டேன். நீங்கள் என்னைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும்" என்று வேண்டினாள்.

அவளோடு கேலி பேசி விளையாட நினைத்தான் இராமன்.

"பெண்ணே! எனக்குத் திருமணமாகி விட்டது. அருகில் இருக்கிறாளே இவள் என் மனைவி. பெயர் சீதை இன்னொருத்தியை நான் மணம் செய்து கொள்ள முடியுமா?"

"அன்பரே! ஆடவர்கள் தங்கள் உள்ளம் கவர்ந்த பலரைத் திருமணம் செய்து கொள்ளலாம்."

"பெண்ணே! நீயோ அரக்கர் குலம். நானோ மானிட குலம். நமக்குள் திருமணமா?"

என்னை மணந்தால் அரக்கர்கள் உங்கள் உறவினர்கள் ஆவார்கள். பிறகு யாராலும் உங்களை எதிர்க்க முடியாது.


இப்படியே இராமன் அவளுடன் கேலியாகப் பேசிக் கொண்டிருந்தான்.


இராமன் கேலி செய்கிறான் என்பதை உணர்ந்தாள் அவள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6 வித்தியாசங்களைக் காண்க







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரழகி ஒருத்தி மனைவியாக இருக்கிறாள். அதனால்தான் இவன் என்னை மணக்க மறுக்கிறான். அவளைக் கொன்றால் என் எண்ணம் நிறைவேறும். என்று நினைத்தாள்.

கொடியவளான அவள் சீதையின் மீது பாய்ந்தாள். அவளைக் கொல்ல முயற்சி செய்தாள். சீதை அலறினாள்.

அங்கிருந்த இலக்குவன் விரைந்து செயல்ப் பட்டான். சீதையை விடுவித்த அவன் சூர்ப்பனகையைப் பிடித்தான்.

தன் வாளை உருவிய அவன் "கொடியவளே! உனக்குத் தகுந்த தண்டனை இதுதான்." என்று அவள் மூக்கை அறுத்தான்.

வேதனை தாங்காமல் துடித்தாள் அவள். "உங்களை என்ன செய்கிறேன்? பாருங்கள்" என்று கதறியபடியே அங்கிருந்து ஓடினாள்.

"அண்ணா! அண்ணா! நீங்கள் இங்கு அரசர்களாக இருக்கிறீர்கள். எனக்கு இந்த நிலை வரலாமா?" என்று ஓலமிட்டாள்.

அவள் அழுகுரலைக் கேட்டுக் கரனும் தூடணனும் அங்கு வந்தார்கள். மூக்கு அறுபட்டுக் குருதி வழிய நின்ற சூர்ப்பனகையைக் கண்டார்கள்.

கோபத்தால் துடித்த அவர்கள் "தங்கையே உன்னை இந்த நிலைக்கு ஆளாக்கியவர்களைக் கொன்று ஒழிப்போம்" என்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரக்கர்களின் பெரும்படை இராம இலக்குவனர்களைச் சூழ்ந்து கொண்டது. ஆரவாரம் செய்தது.

இதைப்பார்த்த இராமன். "இலக்குவனா! சீதையைக் கவனமாகப் பார்த்துக் கொள். நான் இந்தப் படையை அழிக்கிறேன்" என்றான்.

வில்லில் அம்புகளைப் பூட்டி எய்தான். தலைமை தாங்கிய தூடணின் மார்பை ஓர் அம்பு துளைத்தது. உயிர்அற்று விழுந்தான் அவன். இராமனின் அம்பு மழைக்குத் தாங்காமல் அரக்கர் படை ஓடியது.

இதைப் பார்த்த கரன் கடுங்கோபம் கொண்டான். காடே அலறுமாறு கர்ச்சனை செய்தான்.

தன் தேரை இராமனை நோக்கி வேகமாக செலுத்தினான். கூரிய அம்பு ஒன்றால் இராமனின் வில் உடைத்தான். இன்னொரு அம்பால் இராமனின் கவசத்தை துளைத்தான். மேலும் பல அம்பு களைத் தொடர்ந்து விட்டான்.

அவன் அம்புகளுக்கு இராமன் சிறிதும் கலங்கவில்லை. விரைவில் இன்னொரு வில்லை எடுத்தான்.

கரன் மீது குறி வைத்து அம்பு எய்தான். கரன் இறந்து விழுந்தான். தன் அண்ணன்கள் இறந்ததைக் கண்டு சூர்ப்பனகை நடுங்கினாள்.


அச்சத்துடன் அங்கிருந்து ஓட்டம் பிடித்தாள். இராமனின் வீரத்தைப் பார்த்த சீதை மகிழ்ச்சி கொண்டாள். ஓடி வந்து அவனை அணைத்துக் கொண்டாள்.

தொடரும் .........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்ப காலங் களில் மனிதன் தனது கை
விரல்களையும் கால்விரல்களையும்
கூட்டல் கழித்தல் முதலிய கணிப்பீ
டுகளுக்குப் பயன்படுத்தினான்.




---

கிமு 3000 இல் பயன்படுத்தப்பட்ட **Abacus** எனப்படும் எண்சட்டமே மனிதனால் உருவாக்கப்பட்ட முதலாவது கணித்தல் இயந்திரமாகும்.

# இன்றைய நிலை வரையான கணினியின் வளர்ச்சி



1614 இல் John Napier எனும் கணிதவியலாளர் Napier's Bones எனப்படும் பெருக்கல் இயந்திரத்தைக் கண்டுபிடித்தார்




---


1642 இல் Blaise Pascal எனப்படும் French கணிதவியலாளர் Pascalene எனப்படும் கூட்டல் இயந்திரத்தைக் கண்டுபிடித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











1674 இல் Gottfried Wilhelm Von Leibnitz என்பவர் Pascal's machineஇல் சில மாற்றங்களைச் செய்து பெருக்கலுடன் கூட்டல் கழித்தலையும் செய்யவைத்தார்.

கணனியின் தந்தை எனப்படும் Charles Babbage 1833 இல் Analitical Engineஐயும் 1883 இல் Differential Engineஐயும் கண்டுபிடித்தார்.






Analytical Engine




Difference Engine



1840 இல் முதலாவது என வர்ணிக்கப்படும் **Ada** என்பவர் தரவுகளைத் துவித எண் வடிவில் சேமிப்பதைப்பற்றிக் குறிப்பிட்டார். 1880 இல் Dr Herman Hollerith என்பவர் துளைகளினால் தரவைப் பதிகின்ற punch card machine அல்லது tabulating machine ஐக் கண்டறிந்தார்.






1939 Dr.John Vincent Atanasoft என்பவர் KjyhtJ prototype electronic computerஐ உற்பத்தி செய்தார்

1944 Aitken என்பவர் உலகின் முதலரவது தன்னியக்க sequence controlled calculator ஆன Mark 1 ஐ அமைத்தார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


1947 Mauchyஉம் Eckertஉம் ENIAC எனப்படும் இரண்டாவது Electronic digital computerஐ அமைத்தனர்.



1950Turing என்பவர் Ace எனப்படும் உலகின் முதலாவது programmable computerஐ அமைத்தனர்.








1949 Maurice, Eckert மற்றும் Von Neumann ஆகியோர் EDVAC எனப்படும் உலகின் முதலாவது stored program computerஐ அமைத்தனர்.

1951 Mauchy மற்றும் Eckert என்போர் வரத்தகரீதியில் தயாரிக்கப்பட்ட முதலாவது கணனியான UNIVAC 1 ஐ அமைத்தனர்.








1960 Gene Amdahl என்பவர் உலகின் முதலாவது Integrated circuit களாலான பொதுநோக்க digital main frame computer ஆன IBM System/360ஐ வடிவமைத்தார்.

1963 Olsen என்பவர் Digital Equipment Corporation உடன் இணைந்து உலகின் முதலாவது mini computerஆன PDP-1ஐ உற்பத்தி செய்தார்.


Intel Corporationஐச் சேர்ந்த Ted Hoff என்பவர் Intel 4004 எனும் microprocessorஐ உற்பத்தி செய்தார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1975 H.Edward Roberts என்பவர் முதலாவது microcomputerஐ உருவாக்கினார்.




1976 Seymour Cray என்பவரின் CRAY-1 எனும் supercomputer உருவானது



1977 Stephen Wonzniak மற்றும் Steven Jobs என்போர் முதலாவது Apple Microcomputerஐ உருவாக்கினர்.

1980 விலை மலிவான தனிநபர் கணனிகள் (Personal Computers) உருவாகின



## இன்று...













ஜெ.பிரதீபன். B.Sc(Hons), Lecturer in Information Technology,
Sri Lanka Institute of Advanced Technological Education.

இந்தத் தொடரானது பத்துத்தொடக்கம் பதினைந்து வயதுக்குஉட்பட்ட மாணவரை கருத்திற்கொண்டு எழுதப்பட்டாலும் கணனி பற்றிய அறிமுகம் தேவையானோர் அனைவரும் இத்தொடரைத் தொடர்ந்து வாசித்துப் பயன்பெறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின்



# வரலாறு


## துட்டகைமுனு மன்னன் (இ.மு 161-137)

துட்டகைமுனு மன்னன் இலங்கையை ஆட்சி செய்த சிறந்த மன்னருள் ஒருவன். இலங்கையை ஒரு குடையின் கீழ்கொண்டுவந்த அரசர்களுள் துட்டகைமுனுவுக்கு முக்கிய இடமுண்டு.

புத்த மதம் கொண்டுவரப்பட்ட போது இலங்கையை ஆட்சி செய்த தேவநம்பிய திஸ்ஸனுக்குப் பின்னர் உத்தியன், சூரதிஸ்ஸன், அசேலன் ஆகியோர் ஒருவர் பின் ஒருவராக ஆட்சி செய்தனர். அசேலனுடைய காலத்தில் எல்லாளன் என்ற சோழ இளவரசன் இலங்கை மீது படையெடுத்து அசேலனைக் கொன்றுவிட்டு அனுராதபுரத்தை ஆட்சி செய்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




துட்டுகைமுனு சென்ற பாதை

எல்லாளன் வடக்கை ஆட்சி செய்தபோது தெற்கே உருகுணையை காவந்திசன் ஆட்சி செய்தான். இவன், களனி அரச குலத்தைச் சேர்ந்த விகார மகாதேவியை திருமணம் செய்தான். இவர்களுக்கு துட்டகைமுனு, திஸ்ஸன் எனும் இரு புதல்வர்கள் பிறந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைமுனு ஓர் அஞ்சாநெஞ்சன் இலங்கையின் வட பிரதேசங்களைச் சோழர் ஆட்சியிலிருந்து மீட்பதற்கு இவன் இளம்பராயத்திலிருந்து பெருதும் பாடுபட்டவன். எல்லாளன் நீதிநெறிமிக்க ஓர் அரசன். இவனது செங்கோல் ஆட்சி காரணமாக இராசரட்டை 44ஆண்டு காலமாக ஆட்சி செய்யும் வாய்ப்பு அவனுக்கு கிடைத்தது. நாட்டு மக்கள் தமது தேவைகளை அரசனுக்கு அறிவிக்கும் வசதிகளும் காணப்பட்டன. மனிதர்களுக்கு போலவே மிருக ஜீவன்களுக்கும் ஒரே சமமான தன்மையாக கருணை காட்டினார் என மகாவம்சத்தில் கூறப்பட்டுள்ளது.

துட்டகைமுனு மூன்று தடவையாக எல்லாளனுடன் போர் புரிய முயன்ற போதும் தகப்பனாக காவந்திஸ்ஸன் இடமளிக்கவில்லை. இதனால் இளம் இளவரசன் துட்டகைமுனு தந்தையைவிட்டுப் பிரிந்து மலை பிரதேசத்து கொத்மலையில் 25 வருடங்கள் வசித்து வந்தான். இவன் மலையபிரதேசத்தில் வாழ்ந்த காலத்தில் தந்தையர் இறந்தார். தந்தையார் இறந்த பின்பு கொத்மலையில் இருந்து மாகமை சென்று தனக்குரிய அரசுரிமையைப் பெற்றுக் கொண்டான்.

துட்டகைமுனு இராச ரட்டையை பிடிப்பதற்கு தீர்மானித்தான் அநுராதபுரம் நோக்கி புறப்படும் முன்னர் இவன் திஸ்ஸ மஹாராம விகாரைக்கு சென்று பௌத்த சங்கத்தினரை வணங்கி அனுமதி பெற்றான் படை திரட்டி போர் புரியப் புறப்பட்ட துட்டகைமுனு கடேல் என்ற பட்டத்து யானை மேற்சென்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தலை வரை சென்று அங்கே முகாமிட்டிருந்து பின்னர் மகியங்கனை நோக்கிச் சென்றான். மகியங் கனையில் இருந்து எதிரிகள் படைகளை தோற்கடித்து முன்னேறச் சென்ற கைமுனுவின் படை மகாவலி கங்கையை கடந்து மிகப்பெரிய எதிரிகள் கோட்டை யான விஜிதபுரியை அடைந்தது. நான்கு மாதங்கள் வரை நீடித்த போரின் பின்னர் விஜிதபுரியை துட்டகைமுனு கைப்பற்றினான்.

விஜிதபுரிப் போரின் பின்னர் வேறு இடங்களில் இருந்த கோட்டைகளையும் கைப்பற்றிக் கொண்டு துட்டகைமுனு அநுராதபுரத்தை அடைந்தான். இப் போர்கள் எல்லாவற்றிலும் வெற்றி பெற்ற துட்டகைமுனு மன்னன் அநுராதபுர நகர தெற்கு வாயில் அருகே எல்லாள மன்னனுடன் நேருக்கு நேர் தனித்துப் போர் புரிந்தான். இப் போரில் எல்லாளன் உயிரிழந்தான்.

உயிரிழந்த மன்னனைச் சகல மரியாதைகளுடனும் அடக்கம் செய்து அந்த இடத்தில் ஒரு ஞாபக சின்னத்தையும் துட்டகைமுனு கட்டுவித்தான் என வரலாறு கூறுகின்றது. அதுபோலவே அந்த இடத்தை கடந்து செல்லும் யாவரும் எல்லாளனுடைய கல்லறைக்கு மரியாதை செலுத்திவிட்டுப் போகக வேண்டும் என்ற அரச கட்டளையையும் பிறப்பித்தான் இந்த அரச கட்டளை அப்படியே நடைமுறைப் படுத்தப்படுகின்றது. அதற்கிணங்க யானைகள் மீது சென்றவர்கள் இந்த இடத்தில் இறங்கி நடந்தனர். மேள வாத்தியங்களுடன் ஊர்வலம் சென்றவர்கள் சின்னத்தை கடந்து செல்லுகையில் வாத்தியங்களை நிறுத்தி மரியாதை செலுத்தி சென்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாற்பது நான்கு ஆண்டுகள் சோழர் ஆட்சியில் இருந்த அநுராதபுர இராச்சியத்தை தன் வசமாக்கிக் கொண்ட துட்டகைமுனு இலங்கை முழுவதற்கும். ஏகாதிபதி யானான். அதன் பின்னர் நாட்டின் நிருவாக முறை யினைக் சீர்திருத்துவதை தனது முதற் பணியாக இவன் மேற்கொண்டான் இலங்கையை ஒன்று படுத்துவதற்கு முன்னர் தான் ஆட்சி செய்த றுகுணப் பிரதேசத்தை தனது தம்பி திஸ்ஸனுக்கு கையாளித்தான்.

துட்டகைமுனு மன்னன் மிரிச வெட்டிய, ரூவான் செலிசாய, போன்ற சைத்தியங்களையும் லோவா மகாபாய என்னும் விகாரையையும் கட்டுவித்தான் பௌத்தர்களின் புனித தலமாக கருதப்படும் ரூவான் வெலி சாயாவின் உயரம் 90 மீற்றராகும் அதன் அடிப்பாகத்தின் விட்டம் 90 மீற்றர் ஆகும். உலகிலேயே உள்ள புராதன விசாலமான படைப்புக்களில் ரூவான் வெலி சாயவிக்கு ஒரு பிரதான இடம் கிடைக்கப் பெற்றுள்ளது. லோவாமகாபாய அக்காலத்தில் 9 மாடிகளை கொண்டு காணப்பட்டது. இதன் கூரை செம்பு உலோகத்தினால் செய்யப்பட்ட தகட்டினால் அமைக்கப்பட்டதாகும். கட்டிடத்தின் உட்புறத்தில் தங்கம், வெள்ளி, முத்து, மாணிக்கம், என்பவற்றை கொண்டு அலங்கரிக்கப்பட்டது என மகாவம்சம் கூறுகின்றது. எனவே துட்டகைமுனு நாட்டுக்கும் இனத்துக்கும் சமயத்திற்கும் அளப்பரிய சேவைகள் ஆற்றிய சிறந்த ஒரு மன்னன்.

த.லிங்கேஸ்வரன்
இராமநாதன் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்கள் மத்தியில் எழுத்தாற்றலை வளர்ப்பதற்காகவும்
திறமைசாலிகளை வெளிக்கொணர்வதற்காகவும்
பாக்யா சிறுவர் மாத இதழ் நாடாத்தும் கட்டுரைப் போட்டி
இலக்கம் 1., விபரம் அடுத்த பக்கம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***போட்டியில் பங்கு பற்றுவதற்கான விதி முறைகள்***

※ இங்கு காணப்படுகின்ற படத்திற்கு ஏற்றவாறு தலைப்பிட்டு கட்டுரை எழுதப்படல் வேண்டும்.

※ கட்டுரை 200 சொற்களுக்கு மேற்படாமல் இருக்க வேண்டும்.

※ கட்டுரையாளர் 15 வயதுக்குட்பட்டவராக இருக்க வேண்டும்.

※ மாணவர்களின் சொந்த ஆக்கமாக இருக்க வேண்டும்.

※ வரும் ஆக்கங்களில் இருந்து சிறந்த ஆக்கங்கள் தெரிவு செய்யப்பட்டு முதல் பரிசு 250 ரூபா , இரண்டாம் ஆம் பரிசு 200 ரூபா, மூன்றாம் பரிசு 150 ரூபா எனப் பரிசில்கள் வழங்கப்படும். மேலும் 5 பேருக்கு ஆறுதல் பரிசில்கள் வழங்கப்படும்.

※ முதல் பரிசு பெறும் கட்டுரை பாக்யா சிறுவர் மாத இதழில் பிரசுரிக்கப்படும் .

※ வகுப்பாசிரியரின் கையொப்பத்துடன் கட்டுரைகள் வந்து சேரவேண்டிய கடைசித் திகதி 31.07.2007

※ ஆசிரியரின் தீர்ப்பே இறுதி யானது.

※ கட்டுரைகள் அனுப்ப வேண்டிய முகவரி

**பாக்யா காகிதாதிகள் இல.121,கே.கே.எஸ். வீதி, கொக்குவில்.**

**இந்தக் கூப்பனை இணைத்து அனுப்புக.**

பெயர் : ..................................................

வகுப்பு : .............................. பிரிவு: ..............................

பாடசாலை : ..................................................

**32ஆம் பக்க ஆறு வித்தியாசங்களுக்கான விடை**

1) திகதி 2) புத்தகம் 3) பிரஸ் 4)கதிரை 5) மீன் 6) சூரியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் தின விழாவையொட்டி மாணவ மாணவிகளுக்குப் பலவிதான போட்டிகளில் கலந்து கொள்ளும்படி கல்வி அதிகாரி அனுப்பிய சுற்றறிக்கை வந்தது. சிவப்பிரகாசர் நடுநிலைப்பள்ளித் தலைமை யாசிரியர் காலை வணக்கப் பாடலின் முடிவில் அனைத்து மாணவர்களுக்கும் தகவல் கூறினார். தமிழாசிரியரிடம் பெயர்களைப் பதிவு செய்து கொள் ளும்படி கேட்டுக் கொண்டார்.

தமிழாசிரியர் எட்டாம் வகுப்புக்குப் பாடம் நடத்த வந்து சேர்ந்தார். கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டி, பேச்சுப் போட்டி, ஓவியப் போட்டி எனப் பல போட்டிகள் உள்ளன. ஒவ்வொரு போட்டியிலும் முதல் பரிசு, இரண்டாம் பரிசு, மூன்றாம் பரிசு எனப் பல பரிசுகள் உள்ளன. ஆனால் யாருமே பெயர் கொடுக்கவில்லையே? என்று வருத்தம் கொண்டு விவரம் கேட்டார். "நகரத்திலுள்ள மற்றப் பள்ளிகளிலுள்ள மாணவ மாணவிகள் பலர் திறமையானவர்களாக உள்ளனர். அவர்கள் எப்படியும் வென்றுவிடுவார்கள். நாம் போய்க் கலந்து கொண்டு பரிசு பெறாமல் திரும்ப வேண்டும்! எதற்கு வீண் அலைச்சல் என்று பேசாமலிருந்துவிட்டோம்" என்று மாணவர்கள் கூறினார்கள்.

"நம்மால் முடியும்! என்ற நன்னம்பிக்கை நம் எல்லோருக்கும் வேண்டும். இந்த நன்னம்பிக்கை உண்டாக வேண்டுமானால், நமக்கு நம்மீது ஒரு நம்பிக்கையும், தன்னம்பிக்கையும் இருக்க வேண்டும். நம்பிக்கையும் தன்னம்பிக்கையும் இருந்தால் எந்தப் போட்டியிலும் கலந்து கொள்ள ஆர்வம் உண்டாகும். ஆர்வம் பெருகும் போது உரிய முயற்சியும் ஏற்படும். முயற்சி திருவினையாக்கும் என்பது நாம் அறிந்ததே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, நம்பிக்கையுடன் ஈடுபடப் பெயர் கொடுங்கள்" என்றார் தமிழாசிரியர். "அப்படியானால் நான் கட்டுரைப் போட்டிக்கு வருகிறேன்"! என்றாள் மங்கை. "நான் பேச்சுப் போட்டிக்கு வருகிறேன்"! என்றான் குமாரசாமி, "நான் ஓவியப் போட்டிக்கு வருகிறேன்"! என்றாள் சாந்தகுமாரி.

"கவிதைப் போட்டியில் நான் கலந்துகொள்கிறேன். பாரதியார் கூட பதினொன்று பன்னிரண்டாம் வயதிலேயே கவிதை எழுதியதாகக் கூறுவார்கள்" என்றாள் கோமதி.

மறுநாள் போட்டி நடக்கும் பள்ளிக்கு அவர்களை அழைத்துச் சென்றார் தமிழாசிரியர்.

"போட்டிகளில் எவ்வாறு கலந்து கொள்ள வேண்டும், எப்படி எப்படிக் கவிதை, கட்டுரை, ஓவியம், பேச்சு அமைய வேண்டும்" என்றெல்லாம் விவரம் கூறினார் தமிழாசிரியர்.

போட்டி ஆரம்பிக்கும்போதுதான் தலைப்புகள் தரப்படும் என்பதால் பல பள்ளி மாணவர்கள் கலந்த கொள்ளப் பயந்து கொண்டிருந்தனர். ஆனால், சிவப்பிரகாசர் பள்ளி மாணவ மாணவிகள் "கடமையைச் செய்வோம்; பலன் எப்படி ஆயினும் பரவாயில்லை. நன்னம்பிக்கையும் தன்னம்பிக்கையும் கொண்டு பங்கு கொள்வோம்" என்று ஈடுபட்டனர்.

இதுவரை பலவகுப்புக்களிலும் படித்திருந்த கருத்துக்களையெல்லாம் நினைவுபடுத்தி, திரட்டிக் கட்டுரை எழுதினாள் மங்கை. மேடைப் பேச்சு என்பது பலருக்கும் ஒரு விதப் பயம் தரக்கூடியது என்பதால் பள்ளியிலேயே தொடர்ந்து பயிற்சி தந்திருந்தார் தமிழாசிரியர். எனவே, மேடை ஏறியதும் கம்பீர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகவும். ஆணித்தரமாகவும் வாதிட்டு உரையாற்றினான் குமாரசாமி. பாரதியாரின் எளிய நடைமுறையைப் பின்பற்றிப் புதிய கவிதைகளைப் படைத்துத் தந்தாள் கோமதி. அன்றாடம் பத்திரிகைகளில் வந்திருந்த படங் களைப் போட்டுப் போட்டு வரைந்து பழகிய சாந்தகுமாரியும் சிரமமின்றி அழகிய ஓவியம் வரைந்து தந்தாள்.

போட்டி முடிந்ததும், கலந்த கொண்ட மாணவ மாணவிகளுக்குச் சிற்றுண்டி வழங்கப்பட்து. சிற்றுண்டி சாப்பிட்டு விட்டு வந்த அனைவ்ரும் தங்கள் ஊருக்குக் கிளம்பினார்கள்.

"தேர்வு முடிவுகள் தபால் மூலம் அறிவிக்கப்படும்" என்ற தகவல் கூறி இருந்தனர். அதன்படி தபால்காரர் வருகையைப் பள்ளி மாணவர்கள் அனைவரும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

மாவட்டக் கல்வி அலுவலரின் பாராட்டுரையுடன் பரிசுப் பட்டியல் தபாலில் வந்து சேர்ந்தது. அனைத்துப் போட்டியிலும் முதல் பரிசு இந்தப் பள்ளிக்கே கிடைத்திருந்தது.

போட்டி என்றதும் பயம் கொண்டு பலர் கலந்து கொள்வதில்லை. அந்தப் பயம் வேண்டாம்! என்று உற்சாகம் ஊட்டி அழைத்து சென்று போட்டிகளில் ஈடுபடுத்திய தமிழாசிரியரின் முயற்சியை அனைவரும் போற்றினார். அதன் பின்னர் எந்தப் போட்டி வந்தாலும் சிவப்பிரகாசர் பள்ளி மாணவர்கள் உற்சாகத்துடன் கலந்து கொள்ள ஆரம்பித்தனர்.

முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.

குறல் - *616*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சூரிய மண்டலத்தின் மிக அழகான கோளான பூமிக்கு அதன் அழகுத் தோற்றம் நீரிலிருந்தே கிடைக்கின்றது. பூமியின் மேற் பகுதியின் பெரும்பாகம் நீரினால் மூடப்பட்டுள்ளது. நீர் புவியில் பெருமளவு காணப்படுவதனாலேயே புவியில் உயிரினங்கள் வாழக்கூடியதாக உள்ளது.

உலகிலுள்ள நீரில் 97 சதவீதம் உப்பு நீராகக் கடலில் உள்ளது. எஞ்சிய 3 சதவீத நன்னீரின் பெரும்பாகம் பூமியின் தென் முனைவிலும் வட முனைவிலும் பனிக்கட்டியாகவுள்ளது. இது பாவனைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடையாது எஞ்சிய பகுதியில் 0.003 சதவீத நீர் மட்டுமே மனிதனின் பாவனைக்கு கிடைக்கின்றது. இது ஏரிகள், குளங்கள், ஆறுகள், ஓடைகள் ஆகியவற்றின் மூலம் கிடைக்கின்றது.

மனிதனின் தேவைக்கு கிடைக்கக்கூடியதாக இருக்கும் இந்தக் குறைந்த அளவு நீர் பூமியின் எல்லாம் பகுதியிலும் சமமாகப் பரம்பி இருப்பதில்லை. நீரை ஓர் வளமாக நோக்கினோமானால் உலகின் சில பகுதிகளில் நீர் தாராளமாகக் கிடைக்கின்றது. அதே சமயம் அது சில பகுதிகளிற் கிடைத்தற்கரிய அம்சமாகவுள்ளது. இத் தகைய தூய்மையான நீர் இன்று மாசடைதலுக்கு உள்ளாகி வருகின்றது.

சனத்தொகை வளர்ச்சியும் திட்டமிட்ட பொருளாதார அபிவிருத்தியும் வளரும் நாடுகள் பலவற்றில் நீர் வளங்களைப் பாதிக்க ஆரம்பித்து விட்டன. நிலக்கீழ் நீரின் உபயோகம் அதிகரித்து விட்டதனால் நிலத்தின் கீழ்ச் சேரும் நீரிலும் பார்க்க அதிகளவு நீர் வெளியேற்றப்படுகின்றது. அத்துடன் நீர்நிலைகள் பல மூடப்பட்டு குடியிருப்புக் காணியாக வும் விவசாயக் காணியாகவும் மாற்றப்படுகின்றன. மழைவீழ்ச்சிக்கு உதவும் காடுகள் அழிக்கப்படுகின்றன. கிடைக்கக் கூடியதாக இருக்கும் சொற்ப நீரும் கைத் தொழிற் கழிவு நீரைப் பாய்ச்சுவதாலும் மக்களால் மாசுபடுத்தப்படுகின்றது. இவற்றால் மனிதனுக்குக் கிடைக்கும் நீரின் வளம் குறைவதோடு மாசுபடுத்தவும் படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று முக்கிய காரணங்களால் நீர் நிலைகள் மாசடைகின்றன.

1. கைத்தொழில் நடவடிக்கை.
2. விவசாய நடவடிக்கை
3. நகரமயமாதல்

வடிகட்டு தொழிற்சாலைகள், சாயமிடும் தொழிற்சாலைகள், அச்சுத் தொழிற்சாலைகள், தோல் பதனிடும் தொழிற்சாலைகள் என்பவற்றில் இருந்து வெளி யேறும் கழிவுகள் நீர் நிலைகளை அடைந்து நீர்த்தொகுதியை மாசாக்குகின்றது.

எண்ணெய் தாங்கி கப்பலில் இருந்து வெளி யேறும் எண்ணெய் காரணமாகவும் அணுப்பரிசோத கைள் காரணமாகவும் காரையோர, ஆழ்கடல் நீர் மாசடைகின்றது. கடற் கரையோரப் பகுதி, கழிவுப் பொருட்கள் கொட்டப்படுவதனாலும் எண்ணெய் சிந்துவதனாலும் பெருமளவில் மாசாக்கலுக்கு உள்ளா கின்றது. கனியங்கள் அகழ்ந்தெடுக்கப்படுவதால் தோன் றும் பாரமான உலோகங்கள் நீர் நிலைகளை அடை வதால் நீர்ச்சூழல் மாசடைகின்றது.

குடியிருப்புக்களிலிருந்து அகற்றப்படும் கழிவுப் பொருட்கள் நீர் நிலைகளில் சேருவதாலும் மலசலக் குழிகளிலிருந்து கசியும் கழிவுகளினாலும் நீர் மாசடை கின்றது. விவசாய நிலங்களிலிருந்து கிருமி நாசினி, அசேதன பசளை எச்சங்களை காவி வரும் கழிவு, நீர் நிலைகளில் சேருவதாலும் மாசடைதலை தூண்டு கின்றன. அத்துடன் தரைகீழ் நீருடனும் பொசிந்து அந்நீரையும் மாசடைய வைக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நீர் மாசடைதலைக் கட்டுப்படுத்துதல்**

நகர்ப்புற மற்றும் வீடுகளிலிருந்து வெளியேறும் கழிவுகள் நீர் நிலைகளை அடையாது தவிர்த்தல் கழிவுகள் அகற்றப்படுவதற்காக வடிகால் தொகுதிகளை உருவாக்குதல், தொழிற்சாலைக் கழிவுகள் நீர் நிலைகளை அடைவதைத் தடை செய்தல், தொழிற்காலைகள் மற்றும் வைத்தியசாலைகளில் தொற்று நீக்கும் தாங்கிகளை அமைத்தல்.

வளமாக்கிகள், மற்றும் விவசாய இரசாயனப் பொருட்களின் பாவனையைக் கட்டப்படுத்துதல், தீங்கு விளைவிக்கும் இரசாயனப் பொருட்களின் பாவனை யைத் தடை செய்தல், கிராமப் புற சுகாதார நிலையை மேம்படுத்தல், கடலுக்கடியில் மேற்கொள்ளப்படும் அணுபரிசோதனைகளை தடை செய்தல், தோன்றும் கழிவுப் பொருட்களை நவீன தொழில் நுட்பத்தைப் பாவித்து வேறு பொருட்களாக அல்லது தீங்கற்ற பொருட்களாக மாற்றுதல். சமுதாயத்தில் எல்லா மட்டத்தினருக்கும் நீர் மாசடைதலின் தீய விளைவுகளை எடுத்துரைத்தல்.

பூமிக்காகவே மனிதன் படைக்கப்பட்டான். இந்த மனிதன் பூமி வழங்கும் இயற்கைச் சூழலின் வளங்களை அபரிதமாக நுகர்கின்றான். அவனால் நுகரப்படும் மிக தூய்மையான நீரும் அவன் அனுபவிப்ப தோடு வருங்கால சந்ததியினருக்கும் அனுபவிக்க விட்டுச் செல்லுதல் வேண்டும்.

திருமதி.மீ.உதயகுமாரன்
யா/வேம்பாடி மகளிர் உயர்தரப் பாடசாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணித அறிவுப் போட்டி

01. 100 இலும் குறைந்த முதன்மை எண்கள் எத்தனை?

15

02. X அச்சின் சமன் பாடு யாது?

y = 0.

03. ஒரு குறித்த தொகைப் பணத்தின் 17/100 பங்கு ரூபா 8000 எனின் அப்பணத்தின் 34/200 பங்கு எத்தனை ரூபா ஆகும்?

04. 18 மேற்பரப்புகளைக் கொண்ட கூம்பகம் ஒன்றிற்கு எத்தனை விளிம்புகள் உண்டு.

05. $\frac{63}{91} = \frac{\square}{65}$ என்பதில் வெற்றுக் கூட்டில் வர வேண்டிய எண் யாது?

06. X=5 Y=-4 எனின் $(X^2 - Y^2)$ பெறுமானம் யாது?

07. $200 + 20 + 2 + \frac{2}{10} \quad \frac{2}{1000} +$ என்பதன் பெறுமானம் யாது?

08. இரு சமபக்க செங்கோண முக்கோணியின் கோணங்கள் மூன்றை யும் தருக?

09. அடுத்து வரும் மூன்று எண்களின் கூட்டுத் தொகை 42 ஆகும். அவ்வெண்களைக் காண்க?

10. 7 , 8 என்பவற்றால் வகுக்கப்படும் போது முறையே 6, 7, என்ப வற்றை மீதியாகத்தரும் மிகச்சிறிய எண் எது?

11. 4,6 என்பவற்றால் வகுக்கப்படும் போது 1 ஐ மீதியாகத் தரும் மிகச்சிறிய எண் எது?

12. தற்போது ஒரு மனிதனதும் அவரின் மகனதும் வயது கள் முறையே (Y + 3X), 2X வருடங்களாகும் மகன் பிறந்த போது தந்தையின் வயது என்ன?

Y

13. 1$l$ பெற்றோலின் விலை ரூபா 77.40 எனின் $2\frac{2}{3}l$ பெற்றோலின் விலை யாது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. 5 × 5 × 51 என்பது எத்தனையாம் முக்கோணியின் எண் ஆகும்?

15. 50 இலும் குறைந்த அடுத்து வரும் இரு சதுர எண்களின் இலக்கச் சுட்டிகள் சமனாக உள்ளன அவ்வெண்கள்எவை?

16. சுருக்குக

$$17\frac{11}{16} - 14\frac{7}{8}$$

17. (7X - 14) = 35 எனின் (X-2) இன் பெறுமானம் யாது?

18. 23 : 20 : 30 மணித்தியாலத்தில் ஆரம்பமான சினிமாப் படம் ஒன்று 00:20:30 மணித்தியாலத்தில் முடிவடைந்தது. படம் நடைபெற்ற நேரம் எவ்வளவு?

19. ஒரு காணியின் 3/7 பங்கிற்கு உரித்தான ஒருவர் தனது பங்கின் 4/5 ஐ ரூ 4800க்கு விற்பனை செய் தார். இதே விலையில் முழுக் காணியின் பெறுமதி எவ்வளவு?

20. அகலத்தின் மூன்று மடங்கு நீளமான செவ்வகத்தின் பரப்பளவு 432 $m^2$ மாகும் அதன் சுற்றளவு யாது?

**58 ஆம் பக்க அறிவு காப்பாற்றுமா? புதிர் கதைக்கான விடை**

அரசே என் வாழ்நாளும் உங்கள் வாழ்நாளும் பின்னிப் பிணைந்துஉள்ளது. நான் இறந்த 10ஆம் நாள் நீங்கள் இறந்து விடுவீர்கள் என்றார் சோதிடர். சோதிடர் உயிருடன் இருந்தால் தான் தான் உயிருடன் இருக்கமுடியும். என்பதை அறிந்தான் அரசன். அவரைப் பாதுகாக்கும் பொறுப்பையும் அவன் ஏற்க வேண்டியது ஆயிற்று.

**64 ஆம் பக்க விடுகதைகளுக்கான விடைகள்**

1. உரல், உலக்கை
2. தீப்பெட்டிகளும் தீக்குச்சிகளும்
3. வளையல்
4. தொலைபேசி
5. மிளகாய்ப்பழம்
6. பனங்காய்
7. சூரியன், சந்திரன்
8. கீரை
9. நெற்கதிர்
10. ரூபாய்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அறிவு காப்பாற்றும்!

முன்னொரு காலத்தில் பொய்கை நாட்டை இளமாறன் என்னும் அரசன் ஆண்டு வந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனின் நெருங்கிய நண்பனான மணிவண்ணன் அங்கு அமைச்சராக இருந்தான். புகழ்பெற்ற சோதிடர் ஒருவர் அந்நாட்டிற்கு வருகை தந்தார். அரசன் இளமாறன் அவரைச் சிறப்பாக வரவேற்றார்.

" அரசர் பெருமானே! நான் சாதகம் கணித்துக் கொள்வதில் வல்லவன் எதிர்காலத்தில் இன்னது நடக்கும் என்று நான் சொன்னால் அது நடந்தே தீரும் என் வாக்கு என்றும் பொய்யாகாது." என்று பெருமை பேசினார் அந்தச் சோதிடர்.

"இவர் சொல்வது உண்மையா? சோதித்துப் பார்ப்போமே" என்று நினைத்தான். மணிவண்ணனின் சாதகத்தை அவரிடம் தந்தான்.

சோதிடரே! அமைச்சர் மணிவண்ணனின் சாதகம் இது. என் உயிருக்கு உயிரான நண்பர் இவர். இவர் வாழ்நாள் எவ்வளவு என்று கணித்துச் சொல்லுங்கள்" என்று கேட்டான்.

அந்தச் சாதகத்தைப் பார்த்த அவர் ஏதேதோ கணக்கு போட்டார். "ஆ! இப்படியா நடக்கப்போகிறது. தடுக்க வழி இல்லையே" என்று வருத்தத்துடன் முணுமுணுத்தார். "சோதிடரே! எதுவாக இருந்தாலும் தயங்காமல் சொல்லுங்கள்" என்றான் அரசன்.

அரசே! சோதிடர் எதையும் மறைக்கக் கூடாது. உண்மையைத்தான் சொல்ல வேண்டும். அமைச்சரின் வாழ்நாள் இன்னும் இருபது நாட்கள்தான். அவரைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வார்த்தை விளையாட்டு 05இல் பரிசு பெற்ற அதிஷ்டசாலிகள் விபரம்

1. வைத்தீஸ்வர சர்மா மதுராமசர்மா –6A
   யா/அருணோதயக் கல்லூரி
2. கோபாலசிங்கம் சுபாஷன் – தரம் 8A
   யா/நவாலி மகாவித்தியாலயம்
3. திருநாவுக்கரசு பிரியங்கன் – தரம் 6B
   யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி
4. கார்த்திகா நாகேந்திரம் – தரம் 9B
   யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை
5. யனார்த்தனி ஸ்ரீதரன் – தரம் 6 A
   யா/வட்டு இந்துக் கல்லூரி
6. சு.விஜிதாஸ் – தரம் 7 A
   யா/வைத்தீஸ்வராக் கல்லூரி
7. பவானந்தராசா நிதர்சன் – தரம் 8 A
   யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி
8. யுனிஸ்பா செல்வரத்தினம் – தரம் 10 A
   யா/இணுவில் மத்திய கல்லூரி
9. ரா.ஸ்ரீலேகா – தரம் 7 C
   யா/மல்லாகம் மகா வித்தியாலயம்
10. ச.சஞ்ஜீவா – தரம் 6B
    யா/ இந்து மகளிர் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பாற்ற வழி ஏதும் இல்லை" என்று வருத்தத்துடன் சொன்னார். அங்கிருந்த யாருமே அவர் சொன்னதை நம்பவில்லை. அவர் குறிப்பிட்ட இருபதாம் நாள் வந்தது. என்ன மாயம் நடந்ததோ தெரியவில்லை. நல்ல உடல் நலத்தோடு இருந்த அமைச்சன் திடீரென்று இறந்து போனான்.

"சோதிடர்தான் தன் மந்திரத் திறமையால் அமைச்சனைக் கொன்று இருக்க வேண்டும். உயிர் நண்பனைக் கொன்ற அவரைப் பதிலுக்கு கொல்ல வேண்டும். அதற்கு என்ன செய்வது" என்று சிந்தித்தான் அரசன்.

நல்ல வழி ஒன்று அவனுக்குத் தோன்றியது.

சோதிடரிடம் அவர் வாழ்நாள் எவ்வளவு என்று கேட்போம். பல பல ஆண்டுகள் வாழ்வேன் என்றுதான் சொல்வார். உடனே அவரைக் கொன்று போடுவோம்.

திகைத்து நிற்கும் அவையினரைப் பார்த்து, "தான் சாகப் போவது இருவருக்குத தெரியவில்லை. பல அண்டுகள் வாழ்வதாகப் பொய் சொன்னார். அதனால்த்தான் இவரைக் கொன்றேன். இவர் சோதிடம் பொய்" என்போம்.


எல்லோரும் என் கருத்தை ஏற்றுக் கொள்வார்கள் என்று நினைத்தான். மறுநாள் அரசவை கூடியது. அங்கு வந்த சோதிடரை வரவேற்றான் அரசன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சோதிடரே! எல்லோர் வாழ்நாளையும் கணித்துச் சொல்கிறீர். துல்லியமாக நடக்கிறது. உங்கள் திறமைக்கு என் பாராட்டுகள்.

உங்கள் வாழ்நாளைக் கணித்து உள்ளீரா? எவ்வளவு காலம் வாழ்வீர்கள்?" என்று இனிமையாகக் கேட்டான்.














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அறிவு நிரம்பிய அந்தச் சோதிடர் "எல்லோரும் தங்கள் வாழ்நாளைத்தான் என்னிடம் கேட்பார்கள். ஆனால் இந்த அரசனோ என் வாழ் நாள் எவ்வளவு என்று கேட்கிறான். இதில் ஏதோ சூழ்ச்சி உள்ளது. கவனமாக நடந்து கொள்ள வேண்டும்" என்று நினைத்தார்.

"அரசே! என் வாழ்நாளை நான் கணித்துப் பார்க்கவில்லை. இன்றிரவு கணக்குப் போட்டுப் பார்க்கிறேன். என் வாழ்நாள் எவ்வளவு காலம் என்று நாளை சொல்கிறேன்" என்றார்.

"சரி ! அப்படியே செய்யுங்கள்" என்றான் அரசன்.

மறுநாள் அரசவைக்கு வந்தார் அவர். 'நான் இவ்வளவு காலம் வாழ்வேன்" என்று தெளிவாகச் சொன்னார்.

அரசனால் அவரைக் கொல்ல முடியவில்லை. அது மட்டும் அல்ல. அவரைப் பாதுகாக்கும் பொறுப்பையும் அவனே ஏற்க வேண்டியது ஆயிற்று.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுகதைகள்

1. அக்காள் சப்பாணி தங்கை நாட்டியக் காரி
இந்த இருவரும் இல்லா விட்டால் கிராமத்தில்
எந்தக் குடும்பமும் நடக்காது – அவர்கள் யார்?

2. அந்த தாய்க்கு ஐம்பது குஞ்சுகள்
ஐம்பதின் வாயிலும் நெருப்புச்
சுடர் விழும் அது என்ன?

3. அச்சு இல்லாத சக்கரம்
அழகு கூட்டும் சக்கரம்
விதம் விதமாம் சக்கரம்
விலைக்குக் கிடைக்கும் சக்கரம்
அது என்ன?

4. அடங்கிக் கிடப்பான் திடீர் என்று
அலறி அலறி குரல் செய்வான்
எடுத்துக் காதில் வைத்தாலோ
பட்டனை தட்டி நின்றாலோ
ஏதோ சொல்லிக் கதையளப்பான்
யார் அது?

5. அங்கமுத்துத் தோட்டத்திலே
தொங்கு முத்துத் தொங்குது
அதை எடுத்து வாயில் போட்டால்
அடிவயிறும் எரியுது அது என்ன?

6. அட்டைக் கரி பெண்ணுக்கு
உச்சந்தலை மஞ்சல்
ஆவியிலே வேக வைத்தால்
வீதிவரை மணப்பாள் அது என்ன?

7. அண்ணனைக் கண்டாலே வெறுப்பு
தம்பியைக் கண்டாலோ சிரிப்பு
அண்ணனோ எப்போதும் நெருப்பு
தம்பியோ எப்போதும் குளிர்ச்சி
அவை என்ன?

8. அண்ணன் தம்பி தோட்டத்திலே
பச்சைப் பாய் விரித்து இருக்கு
பக்குவமாய் எடுத்து வந்தால்
பசிக்குதவும் சுவைக்குதவும்
அது என்ன ?

9. ஆடி அசைந்து வரும்
அங்கம் வளைந்து வரும்
தங்க நிற மணிக்கொத்தால்
தலைசாயும் நேரத்தில்
கண்டார் களிப்படைவர்
காசினியில் என்ன அது?

10. விதவிதமாய் கோடிருக்கும்
வித்தியாசமாய் பூ இருக்கும்
செடி அல்ல சித்திரமல்ல
சேர்ந்த இடத்தில் செழுமை
சேராத இடத்தில் வறுமை
அது என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாக்யா

சிறுவர் மாத இதழினை விமர்சித்து பத்திரிகைகளில் வெளிவந்த மதிப்பீட்டுரையில் இருந்து....

முழுக்க முழுக்க இது சிறுவர்களுக்கே உரிய இதழாக வெளியாகியுள்ளமை சிறப்பான அம்சமாகும்

உதயன்

பரதநாட்டியக்கலை சித்திரக்கலை உட்பட அழகியற் கலைகள் கல்வியில் பெறும் முக்கியத்துவத்தினை விளக்கும் கட்டுரைகள் காணப்படுகின்றன

தினக்குரல்

An Independent Daily Voice in Tamil

சஞ்சிகை வெளியீட்டுத்துறை நலிவடைந்து காணப்படுகின்ற இன்றைய சூழலில் இவ்வாறான முயற்சி பாராட்டுக்குரியது

விஜய்

சிறுவர்களுக்கு பயனுள்ள ஆக்கபூர்வமான பல்வேறு விடயங்களை தன்னகத்தே கொண்டு வெளிவரும் பாக்யா சிறுவர் மாத இதழ் எமது சிறுவர்களிடம் தனக்கென்றொரு இடத்தைப் பிடிக்கும் என நம்பலாம்

கலைமுகம்

கண்ணைக் கவரும் அழகிய அட்டைப் படங்கள் இதழை மேலும் அழகூட்டி நிற்கின்றது

ஞாயிறு தினக்குரல்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org